




# குடும்ப ஆலோசனை அலுவலகம்

தாம்பத்ய வாழ்க்கையில் மற்றும் சொந்தங்களுக்கு இடையில் பிரச்சனைகள் உள்ள தம்பதிகளுக்கு குடும்பங்களிற்கு மற்றும் தனிப்பட்ட நபர்களுக்கு உதவி வழங்குவதே குடும்ப ஆலோசனை அலுவலகமாகும்.



*«–எங்களால் தற்போது சண்டையில்லாமல் மற்றவரின் கூற்றை மறுக்க முடிகிறது»*
*«–குடும்ப ஆலோசனை அலுவலகத்தின் உதவியின்றி இந்த கடினமான காலத்தை எம்மால் கடந்திருக்க முடியாது»*

Bufetat



இது ஒரு இலவச சேவையாகும்.

குடும்ப ஆலோசனை அலுவலகத்தினர் தொழில் இரகசியத்தை கடைப்பிடிக்கவேண்டும்.

வேறு எவரது முன்மொழிதலும் இன்றி எம்முடன் தொடர்பு கொள்ளலாம்.



# குடும்ப ஆலோசனை அலுவலகம் என்றால் என்ன?

**தாம்பத்ய வாழ்க்கையில் மற்றும் சொந்தங்களுக்கு இடையில் வெவ்வேறு விதமான பிரச்சனைகள் உள்ள தம்பதிகளுக்கு, குடும்பங்களிற்கு மற்றும் தனிப்பட்ட நபர்களுக்கு உதவி வழங்குவதே குடும்ப ஆலோசனை அலுவலகமாகும். குடும்ப ஆலோசனை அலுவலகமானது ஒரு இலவச சேவையாகும். வேறு எவரது முன்மொழிதலும் இல்லாமல் எம்முடன் தொடர்பு கொள்ளலாம். உங்களுக்கு அருகாமையில் இருக்கும் குடும்ப ஆலோசனை அலுவலகத்துடன் நீங்கள் சுயமாகவே தொடர்பு கொள்ளலாம்.**

குடும்ப ஆலோசனை அலுவலகமானது குடும்பத்தில் பிரச்சனைகள், சண்டைகள், கருத்து வேறுபாடுகள் ஏற்படுகையில் ஆலோசனை மற்றும் வழிகாட்டுதலை வழங்கும் ஒரு விசேடத்துவம் பெற்ற அலுவலகமாகும். நாளாந்த வாழ்வில் பிரச்சனைகள் எழும் போது அவற்றை பற்றி கதைப்பதற்கும் அறிவுரைகளை பெறுவதற்கும் பெரும்பாலானவர்கள் எமது அலுவலகத்திற்கு வருவார்கள். எமது அலுவலகங்களில் குடும்ப வழிகாட்டலில் விசேடத்துவம் பெற்ற உளவியலாளர்கள் மற்றும் சமூகவியலாளர்களே தொழில் புரிகின்றார்கள். குடும்ப ஆலோசனை அலுவலகத்தில் தொழில் புரிபவர்கள் தொழில் இரகசியத்தை கடைப்பிடிக்கவேண்டும்.

## எவர் தொடர்பு கொள்ளலாம்?

தம்பதிகள், குடும்பங்கள் மற்றும் தனிப்பட்ட நபர்கள் அத்துடன் பிள்ளைகள் மற்றும் இளையோர் ஆகியோர் குடும்ப ஆலோசனை அலுவலகத்தினருடன் தொடர்பு கொள்ளலாம். குடும்ப ஆலோசனை அலுவலகத்தினருடன் தொலைபேசி மற்றும் மின்னஞ்சல் ஊடாக தொடர்பு கொள்ளவும்.



## எவ்வாறான உதவி வழங்கப்படும்?

ஆலோசனை வழங்கலும் சம்பாசணைகளும்

குடும்ப ஆலோசனை அலுவலகமானது ஒரு மனிதனை அவரின் குடும்ப வாழ்க்கை மற்றும் வாழ்க்கை சக்கரத்தின் வெவ்வேறு காலகட்டத்தில் சந்திக்கின்றது:

- தமது தாம்பத்ய வாழ்க்கையை சீர்படுத்த விரும்பும் தம்பதிகள்
- புதிதாக பெற்றோராகி பராமரிப்பு மற்றும் புதிய பொறுப்புகளை தாங்க முனையும் தம்பதிகள்.
- குடும்பத்தில் ஒத்துழைக்க கடினப்படும் பெற்றோர், பிள்ளைகள் மற்றும் இளையோர்.
- சந்ததிகளுக்கு அதாவது பரம்பரைகளுக்கு இடையிலான பிரச்சனைகள்
- தாம்பத்ய வாழ்க்கையை முடித்த பின்பு ஏற்படும் பிரச்சனைகளை எதிர்நோக்க கடினப்படுவோர்.
- பிரிந்து வாழும் தம்பதியர் இடையேயான ஒத்துழைப்பை மேம்படுத்த உதவி.
- புதிதாக இணைந்த தம்பதியர் இடையில் தனது மற்றவரது அத்துடன் இருவருக்கும் இடையில் பிறந்த பிள்ளைகள் மூலம் உருவாகும் பிரச்சனைகளை எதிர்நோக்கல்.
- சுகயீனம் மற்றும் இழப்புகளால் துன்புறும் குடும்பங்கள்.
- வெவ்வேறுபட்ட கலாசாரத்தால் ஏற்படக்கூடிய பிரச்சனைகளுக்கு உதவி புரிதல்.
- கட்டாய திருமணம் மற்றும் அது போன்ற பாரம்பரிய ஒழுக்கங்களால் ஏற்படக்கூடிய உடல் நல பிரச்சனைகள்.
- நெருங்கிய உறவுகளுக்கிடையில் பலாத்காரம் மற்றும் மிரட்டல்களை அநுபவிக்கும் பெற்றோர் மற்றும் பிள்ளைகளுக்கான உதவிகள்.
- எழுந்தமானமான அதாவது நபர் சார்பற்ற பாலியல் பிரச்சனைகளுக்கான உதவிகள்.

பிரிந்து வாழ்கையில் மற்றும் தாம்பத்ய உறவு முறிவடைகையில் பிணக்கு தீர்த்தல்

குடும்ப ஆலோசனை அலுவலகமானது தம்பதிகள் பிரியும்போது அவர்களுக்கு 16 வயதிற்கு உட்பட்ட பிள்ளைகள் இருக்குமாயின் சட்டரீதியாக நிறைவேற்றப்பட வேண்டிய பிணக்கு தீர்த்தலை வழங்கும். திருமணமாகாமல் இணைந்து வாழ்பவர்கள் பிரியும் போதும் விரிவாக்கப்பட்ட பிள்ளைகள் பராமரிப்பு நன்கொடை பெறவேண்டுமாயினும் அவர்களும் பிணக்கு தீர்த்தல் சம்பாசணைக்கு கட்டாயம் செல்ல வேண்டும். பெற்றோர் பொறுப்புரிமை, பிள்ளையுடன் சேர்ந்திருக்கும் நேரம் மற்றும் பிள்ளையின் வசிப்பிடம் பற்றி நீதிமன்றத்தில் வழக்கு தொடர விரும்புவோரும் பிணக்கு தீர்த்தல் சம்பாசணைக்கு கட்டாயம் செல்ல வேண்டும். பிணக்கு தீர்த்தல் சம்பாசணையின் நோக்கமானது பிள்ளைகளின் நிலவரம் மற்றும் பெற்றோர் பொறுப்புரிமை பற்றி குடும்பங்களுக்கிடையில் ஒப்பந்தங்களை ஏற்படுத்துவதாகும்.

பயிற்சி வகுப்பு மற்றும் குழுக்களிற்குரிய உதவித்திட்டங்கள்

குடும்ப மற்றும் தாம்பத்ய வாழ்க்கை பற்றிய முக்கியமான பல பிரச்சனைக்குரிய உதவி வழங்கும் பயிற்சி வகுப்பு மற்றும் குழுக்களிற்குரிய உதவித்திட்டங்களை பெரும்பாலான குடும்ப ஆலோசனை அலுவலகங்கள் வழங்குகின்றது. தாம்பத்ய வாழ்க்கை பற்றிய வகுப்பு, முதல் தடவை பெற்றோராகும் தம்பதிகளுக்கான வகுப்பு, ஆற்றல் தகைமை குறைந்த பிள்ளைகளை கொண்ட குடும்பத்தினரிற்கான வகுப்புகள், தாம்பத்ய வாழ்வில் இருந்து பிரிந்த தம்பதிகள் மற்றும் பிள்ளைகள் கொண்ட குழுக்களிற்கான வகுப்பு மற்றும் பலோத்காரம் பிரச்சனையாக உள்ள குடும்பத்தினரிற்கான வகுப்புகள் ஆகியவை இங்கு வழங்கப்படும் உதவிகளில் அடங்கும்.

தகவல் வழங்கும் நிலையம்

குடும்ப ஆலோசனை அலுவலகமானது தாம்பத்ய மற்றும் குடும்ப வாழ்வு பற்றி தகவல் அத்துடன் ஆலோசனை வழங்கும் அலுவலகமாகும். இங்கு பொதுசன தகவல்கள், தெரிந்து எடுக்கப்பட்ட மக்கள் குழுக்கள், ஊடகங்கள், குழந்தைகள் அல்லது மழலைகள் பள்ளி, பாடசாலைகள், மற்றும் வேறுபட்ட குழுக்கள் உள்ளடக்கப்படும். குடும்ப ஆலோசனை அலுவலகங்கள் பலதரப்பட்ட சிறப்பு தகைமை பெற்ற வழிகாட்டிகளிற்கு ஆலோசகர்களாக இருப்பதுடன் குடும்பங்கள், வளர்ப்பு மற்றும் தாம்பத்ய உறவு பற்றிய விடயங்களுடன் தொழில் புரியும் அமைப்புகளுடன் இணைந்து தொழிற்படுவர்.

## தங்களுக்கு அருகாமையில் இருக்கும் குடும்ப ஆலோசனை அலுவலகத்தை கண்டுபிடியுங்கள்:

## www.bufetat.no/familievern

குடும்ப ஆலோசனை அலுவலகமானது பிள்ளைகள் இளையோர் குடும்ப பிரிவின் **(Bufetat)** ஒரு பகுதியாகும். இப்பிரிவானது பிள்ளைகள் இளையோர் குடும்ப ஆணையகத்தினால் **(Bufdir)** நிரவகிக்கப்படும்.

**Bufetat Region Midt-Norge**
Nordreg. 12, 2. et.
7495 Trondheim
Tlf.: 46 61 50 00
E-post: region.midt@bufetat.no

**Bufetat Region nord**
Betongveien 2
9509 Alta
Tlf.: 46 61 50 00
E-post: region.nord@bufetat.no

**Barne-, ungdomsog familiedirektoratet (Bufdir)**
Postboks 8113 Dep
0032 Oslo
Besøksadresse:
Universitetsg. 7/Stensbergg. 25
Tlf.: 46 61 50 00
E-post: post@bufdir.no

**Bufetat Region øst**
Postboks 7024 St. Olavs plass
0130 Oslo
Tlf.: 46 61 50 00
E-post: region.ost@bufetat.no

**Bufetat Region sør**
Postboks 2403
3104 Tønsberg
Tlf.: 46 61 50 00
E-post: region.sor@bufetat.no

**Bufetat Region vest**
Postboks 6200
5893 Bergen
Tlf.: 46 61 50 00
E-post: region.vest@bufetat.no

புதிய செயதி பதிவீடுகள் எமது இணையத்தளத்தில் குறிப்பிடப்படும்.

Bufetat

பிள்ளைகள் இளையோர் குடும்ப பிரிவு (Bufetat) நாட்டின் எந்த பிரதேசத்தில் வசிப்பவராயினும் எம்மிடம் வருபவர்களுக்கு சிறந்த தரத்திலான உதவி ஆதரவு மற்றும் விபரங்களை வழங்குவதே இப்பிரிவின் பிரதான செயற்பாடாகும். Bufetat ஆனது ஐந்து பிரதேச அலுவலகமாக ஒழுங்கு அமைக்கப்பட்ட பிள்ளைகள் மற்றும் சமவுரிமை திணைக்களத்தின் (BLD) நிர்வாகத்தின் கீழ் இயங்கும் ஒரு பிரிவாகும். அரச குழந்தைகள் நலன்பேண் அலுவலகம் குடும்ப ஆலோசனை அலுவலகம் மற்றும் தத்தெடுத்தல் ஆகியவை Bufetat இன் பொறுப்பின் கீழ் அடங்கும்.

நோர்வேயின் ஒவ்வொரு மாகாணத்திலும் குடும்ப ஆலோசனை அலுவலகம் இருக்கும். இவை பெரும்பாலும் அரச அலுவலகங்களாகும் ஆயினும் சில தேவாலய அலுவலகங்களும் இங்கு இருக்கின்றன. அனைத்து அலுவலகங்களும் Bufetat இன் நிர்வாகத்தின் கீழ் இயங்கும். தேவாலய அலுவலகங்கள் யாவும் தேவாலய குடும்ப ஆலோசனை அலுவலகத்தில் (KF) அங்கத்துவம் கொண்டவையாகும். குடும்ப ஆலோசனை அலுவலகத்தினது சேவையானது குடும்ப ஆலோசனை அலுவலக சட்டத்திற்கு அமையவே அதாவது அதற்கு உள்ளடக்கப்பட்டே இருக்கும்.